T-UN-596

உ

தெய்வமேதுணை.

பதினெண்சித்தர்கள்

41 A

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியக்கண்ணாடி

முதற்பாகம்.

இஃது,

சிலஏட்டுப்பிரதிகளைக்கொண்டும்

கைமுறைகளைவாங்கியும் அச்சுப்பிரதிகளைதிருத்தியும்

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

49

உ

சிவமயம்.

யோகமுனி
வயித்தியக்கண்ணாடி.

கணேசர்காப்பு.

அத்திமுகத்தவனைப் பணிந்தேத்தியே
சித்தர்நூலைத் திரட்டிக்கண்ணாடிபோல்
வைத்தேன்மானிடர் வாழ்ந்துசுகித்திட
கைத்தொழிலாகும் கண்ணாடியைப்பாருமே.

சீரானவாதமென்னவயித்தியமென்ன செய்முறையோடவிழ்தங்கள்செய்வதென்ன, பாரானபலநூலும் பார்க்கவேணும் பாங்கானசரக்குவகை அறியவேணும், ஆராய்ந்துபுத்தியினால் செய்யவேணும் அல்லாவிட்டாலகுருதொட்டுக்காட்டவேணும், தாருமாறுய்செய்துசிலமடையரெல்லாம்சாஸ்திரம்பொய்யென்பார்சண்டாளரப்பா. க

பொய்யென்றுசாஸ்திரத்தைச்சொல்வானாகில் புழுவானபாழ் நரகில்வீழ்வான்பாவி,மெய்யென்றுகுருபதத்தை தொண்டுபண்ணி வேதாந்தம்பலநூலும் விரித்துப்பார்த்து, கைமுறையுங்குருமுகமாய்க்கண்டுதேறி கற்றவரைவணங்கியேசொல்லக்கேட்டு, பொய் மறந்துமெய்புகந்து அறிவிற்கூடி பூரணமேதெய்வமென்றுபோற்றிநித்தம், துய்யவனேமுறையோடேசெய்துபாரு தொட்டதொருவித்தையெல்லாம்பலிக்கும்பாரே. உ

சுக்குசூரணம்.

பாரேநீவாய்வுக்குகுட்சங்சேளு பாங்கானசுக்கு சூரணமே செய்து, காரேநீசீனிசர்க்கரையவ்வீதம் கலந்துமேயிருவேளைஎழு நாளும், சேரேநீதின்றுவரவாய்வுதீரும் திறமானதீபனமும்உண்டாமப்பா, ஊரெல்லாமருந்திருக்ககாட்டில்போய்நீ ஊத்தரைப் போல்அழியாதேஉண்மைகேளே. ௩

திப்பிலிசூரணம்.

உண்மையென்றதிப்பிலிசூரணமேசெய்து உகமையுடன்தேனிலேகுழைத்துத்தின்ன, வண்மையுடன்புகையிருமல்சேத்மரோகமும் மாறியேபோகுமடாபசியுமுண்டாம், நன்மையுடன்மிளகுசூரணமேசெய்து நலமானபசுநெய்யும்சீனிகூட்டி, தண்மையுடன்மூன்றுநாளாறுவேளை தானறுந்தசளியிறுமல்தவறிப்போமே. ச

வெள்ளைக்கு சூரணம்.

ஒன்றாகபின்னமொருசூரணங்கேள் உத்தமனேசந்தனமும்
அகிற்கட்டையேலம்,நன்றாகலவங்கபட்டைகிரும்புசோம்பு னல்ல
அதிமதூரம்வால்மிளகினோடு, சென்றதோர்வெட்பாலைதேற்றான்
வித்து திறமான அருகம்வேர் சிற்றாமுட்டி, பண்பானமாசிக்காய்
மூங்கிலுப்புபகர்வெள்ளைகுங்கிலியம்பலநேர்வாங்கு. ௫

வாங்கியேஉலர்த்திசூரணமேசெய்து வண்மையுடன்யிடைக்
கிடைகற்கண்டுகூட்டி, தேங்காமல்ஒருகடிதான் அந்திசந்தி தின்
ணப்பாபசுவெண்ணெதனிற்கலந்து, ஒங்கியேயோடுகின்றவெள்ளை
தீரும் உத்தமனேநீரெரிப்புவுடனேதீரும், பாங்கானசுட்டபுளிவ
ருத்தவுப்பு பத்தியத்தைக்சாப்பாற்றவியாதிபோச்சே. ௬

வாய்ரெணத்துக்குகியாழம்.

விளாயிலையும்செம்பருத்திவில்வம்துத்தி வெள்ளைவெங்காய
மொடுகீழாநெல்லி, உளவானவெந்தியமோடேழும்சேர்த்து ஒரளா
வாய்நிறத்துறலில்போட்டிடித்து, அளவாகஜெலம்வார்த்துபாதி
யாக்கி அப்பனேமூன்றுநாளாறுவேளை, தளராமல்உள்ளுக்கேகொ
ண்டையானால் தங்குமோவாய்ரெணந்தான்பரந்துபோச்சே. ௭

பல்லுநோய்க்குபொடி.

பரந்துபோம்பல்நோய்பல்லுக்குத்தல் பல்புழுவுரத்தம்விழல்
இவைகளெல்லாம், எருக்கம்பிலைபழுப்புசுண்ணம் அரைத்துக்கொண்டு
இரண்டுபுரைகந்தைசுத்திசாணிபூசி, சிருக்கவேபுடம்போட்டுசூர்
ணமாக்கி சிக்கனவேமறுபடியும்யெருக்கம்பாலால், * தருக்கித்து
பில்லைதட்டிஓட்டில்வைத்து தட்டாமல்மூன்றெருவால்புடத்தைப்
போடு. ௮

* தருக்கித்து - எருக்கம்பால்விட்டரைத்து.

போடுமூன்றும்புடமும்போட்டுக்கொண்டு பத்திரமாய்அதை
வேரேவைத்துக்கொண்டு, தேடியேமுடக்கத்தான்சமூலதேதோடே
தேரினதாய்கடுக்காவும்சுக்காங்கல்லும்,கூடவேகரிவேலம்பட்டை
துத்தம் கூட்டிஐந்துஒரிடையாய்பிடித்துதூளாய்,ஜாடுவாய்ஜெலம்
வார்த்திமைபோலாட்டு சாந்துபோலானபின்புபில்லைதட்டே. ௯

பில்லைதட்டிவெய்யலிலேஉலர்த்திக்கொண்டு பின்னெடுத்து
ஒருவாட்டியாலேசுட்டு,சொல்லிவைத்தயெருக்கஞ்சூரணத்தினோ
டே சேர்த்திரண்டும்ஒன்றாகக்கலந்துகொண்டு, பல்லுக்குஅந்திசந்
தியெட்டுநாள்தான் பால்மாறாமற்றுலக்கிவந்தையானால்,தொல்லை
யந்தபல்லிலுள்ளநோய்களெல்லாம் துஷ்டனென்றேஉன்னைவிட்டு
ஓடும்பாரே. ௧௦

இதுவும்பல்லுக்கு.

பாப்பாரமுள்ளியெனுங்கண்டங்கத்திரி
பாண்டத்திலிட்டுகறிக்கியெடுத்ததை

இராப்பகல்நித்தந்துலக்கியேவந்திடில்
இராவணன்போலேமடிந்திடும்உண்மையே.

ஜன்னிக்கி தலைமுழுகும் தயிலம்.

உண்மையாய்ஜன்னியத்துபறந்துபோக ஒளியாமல்கைமுறை யைவெளிபாய்ச்சொன்னேன்,யெண்ணையென்றால்நல்லெண்ணெய் அரைப்படிக்கி யெதிரிடையாமமூவேம்பின்சாறுழக்கு, எண்ணி யேசவுரிபழம்ஒன்றுபோடு யிரண்டுபலங்கஸ்தூரிமஞ்சள்போடு, பண்ணவேகருஞ்சீரகந்தான்ரெண்டு பலத்தோடேபளிங்குசாம்பி ருணிகாலு. கஉ

காலுபலம்பளிங்குசாம்ருணிபோட்டுஆறும்ஒன்றாய்க்கலந்து அடுப்பிலேற்றி, மிஞ்சாமசிறுதணலாயெரிக்கவேணும் முறியாமல் எளம்பதமாயிரக்கவேணும், வஞ்சியர்மேல்மோகமதைநீக்கிவைத் து வாரத்துக்கிரண்டுவிசைமுழுகவேணும், கொஞ்சமென்றுபொ டிபொகைசாறுயங்கள்ளு குடியாதேபின்னலேபழித்திடாதே.கங

இதுவும் ஜன்னிக்கி தைலம்.

பழிக்காதேயின்னமொருமுறையைக்கேளுபனைமரத்தின்வேர் அறுகம்பில்லுவேறுசெழித்த அரைக்கீரையுடவேருங்கூடசேரப் பாராணையுடகிழங்குதானும், பழுத்துலர்ந்தமுளகாயும்ரண்டுபோ டு பளிங்குசாம்ருணிகால்பலமேபோட்டு, வழுத்தினயிவ்வகையெ ல்லாம்பிடித்துக்கொண்டுவையப்பாஎண்ணையரப்படியைத்தானே.

அரைப்படிதான்நல்லெண்ணைஅடுப்பிலேற்றி ஆறும்ஒன்றாயி டித்துஅதிலேபோட்டு,அரைப்பதமாய்தயிலமதுகாயும்போது அ ப்பனேஎட்டிபழம்ஒன்றுபோடு, பருவமாய்காச்சியதையெறக்கிக் கொண்டு பண்ணப்பாவாரத்துக்கிரண்டுஸ்தானம், சிரசுநோய்புரு வநோய்கழுத்துநோயும்சொல்லாமல்போகுமடாசுட்சந்தானே.

இருமலுக்குசூரணம்.

தீருமேஅஸ்தியிலேசூடுகொண்டால் தீராதவறட்சியொடுயி ளைப்பிருமல், தீருமேபுகைச்சலொடுதொண்டைக்கம்மல் சிணுக் கிருமல்நாக்கூரல்வரட்சிகோழை, கூருமேநாவரட்சி மூலச்சூடு கூரரியபித்தமொடுகனமேகங்கள், ஆருமேயிவையெல்லாம்ஓடிப் போக ஆடாதோடைகோஷ்டந்திப்பிலியே. கசு

திப்பிலிபும்வசம்போடுநெல்லிமுள்ளி சிறுகடுக்காய்வழுதலை வேர்முடக்கத்தானும், நாகப்பூவல்லாரைமிளகுசுக்கு நாலெட்டும் பலம்நாலாய்சேர்த்திடித்து,ஒப்பியேநாளொன்றுக்கந்திசந்தி ஒரு கடியாய்த்தூளெடுத்துவிளம்பக்கேளு, செப்பரியபசும்நெய்யில்கு ழைத்துஉண்ண செப்பியதோர்நோய்களெல்லாஞ்சஞ்சீவிதானே.

சஞ்சீவியெண்ணெ.

சஞ்சீவியிஞ்சிச்சார்படிதானென்று தனியானநல்லெண்ணெப்
படிதானென்று, சஞ்சீவிஆவின்பால்படிதானென்று சாறிடித்து
மெழுகுபதமாகக்காச்சி, சஞ்சீவியாகவேவடித்துவாங்கு மாறாமல்
முழுகிவரசூலைவாய்வு, அஞ்சியேகபாலநோய்மண்டைகுத்துஅடர்
சன்னிகிறுகிறுப்புமயக்கம்போமே. ௧௮

கருஞ்செம்பைத்தயிலம்.

போடுமென்றமேகவகையெல்லாம்தீரப் புகலுகிறேன்தையில
மொன்றுபுத்தினுட்டு, ஆமென்றகருஞ்செம்பையிடித்துசாறு ஆவி
ன்பால்விட்டதிலேபிசைநதுநன்றாய், நாமென்றபடியொன்றுபிழி
ந்துக்கொண்டு நல்லெண்ணெ ஒருபடிதானதிலேவார்தது, ஆமென்
று அடுப்பேற்றி எறித்துக்காச்சி அப்பனேமெழுகுபதம்வடித்தி
டாயே. ௧௯

வடித்துமேநாலுநாள்மட்டும்மூழ்கு மகத்தானமேகவகைகூ
டுகாந்தி, நடுக்கின்றஅஸ்திசுரம்அஸ்திவெட்டை நாடாதுகண்ணெ
ரிவுகாந்தல்தீரும், திடத்தமுருமதேகமதுசவுக்யமாம்பார் செப்பா
ர்கள்வைத்தியர்கள்உலகில்மைந்தா, படித்திட்டமதுராதிசந்தனுதி
பரிவானமேகாதியிதுக்கொவ்வாதே. ௨௦

பூவரசன்பேதி.

உண்ணுநீபுரசைவித்துஆவின்பாலில்உறுதியுடன்அரைத்துண்
ணபேதியாகும், நண்ணுமடாநோயெல்லாந்தீருந்திரேகம்சவுக்கிய
மாம்சண்டாள்க்கிறிமிதானும், நண்ணுகின்றகிறிமிசாகயின்னமொ
ன்று நவில்கொன்றைமரத்துடையகொழுந்துவாங்கி, வண்ணமுட
னுப்பிலாதவிழ்த்தேயுண்ண மற்றுனாள்கூண்டேசடேவீழும்பாரே.

கிறிமி நாக்குப்பூச்சி துவரைபேதி.

வீழுமடாதுவரையுடபேதிகேளு மிதமாகநற்றுவரை வேக
வைத்து, ஆழுமந்ததுவரைநீக்கிஜெலத்தைவாங்கி அப்பனேகருப்
புவெல்லமதிலேபோட்டு, சூழுமந்ததுவரைதான்வெல்லநீரைசோ
றுமலுண்டிவரபேதியாகும், தாழுகின்றதுவரையிலேமிளகுபோட்
டு தண்ணீர்போல்காச்சிபகல்சாதமுண்ணே. ௨௨

தூதவளைலேகியம்.

பூரணமாமின்னமொருலேகியங்கேள் புலத்தியனேமானிடர்
கள் பிழைக்கவென்று, காரணமாமுறுங்கைப்பூதூதுளம்பூ கணக்
காகவகைக்குக்கால்பலம்நிறுத்து, தாரணியில்*சதாவேரிக்கிழங்கு
மூன்று தருவானநன்னார்வேர்பலமிரண்டு, காரணமாநிலப்பனையும்
நெரிஞ்சிமுள்ளும் கண்மணியேவகைக்குஒருபலமாய்க்கூட்டு. ௨௩

* சதாவேரி தண்ணிவிட்டான்கிழங்கு.

கூட்டியேசூரணித்துபசுவின்பால்தான் குறுணியிலேபோட்டு மேகுழம்புபோலே, * தாட்டியேலேகியம்போல் கிளரும்போது தட்டாமல்சீனிபத்துபலமேபோடு, வாட்டமாய்கிளரயிலே பசுவி நெய்தான்வாறு அரைப்படியுடனேதேனுக்கு,கெட்டியாய்லேகியம்போல்பதமாய்க்கிண்டி கருத்தினல்கடவுளைநீதியானம்செய்யே.

* தாட்டியே அடுப்பில்வைத்து.

செய்துமேபுன்னைக்காயளவுகொள்ள தீருகிறவியாதிதனைதிறமாய்க்கேளு, எய்துகின்றபிரமியமும்மேகநோயும் பொல்லாதமெலும்புருக்கிபிரமேகந்தான், பெய்துமேமண்டலத்தில்தீருங்காலில் பலமுண்டாம்பிந்திரியலாபமுண்டாம், செய்தயிந்தலேகியத்தில்மேகமெல்லாம் தீருமடாபத்தியமோர்யில்லைபாரே. ௨௫

பீநிசத்துக்குபுகை,

திரியென்னபூவரசன்வெள்ளெருக்கன்வேறும் திரமானமலைத்தாங்கிகஸ்தூரிமஞ்சள்,உரமானசிறுநாகம்சீரகமும்சேர்த்துஉத்தமனேபுகையிலைச்சாற்றிலாட்டி,திரமாகசீலையிமேல்புரட்டிக்கொண்டு தீயிலேவத்திதனைகொளுத்திக்கொண்டு, வருகின்றபுகையெல்லாம்மூக்கிலேற்ற வாடுமடாசன்னியெல்லாந்தணியுங்கேளே. ௨௬

கபாலசூலைக்கி சவுரித்தயிலம்.

கேளப்பாசவுரிபழம்சாறுழக்கு கிறுபையுடன்பொடுதலையின்சாறுழக்கு,கேளப்பாபசுவினிடபாலொழக்குவெள்ளெண்ணை உழக்குபலம்மிளகுசேர்த்து, தாளப்பாகலக்கியதை மெழுகுபோலே தான்காச்சிதயிலமதைமுழுகும்போது, கேளப்பாஒன்றுமில்லைமிளகுநீரும் கூட்டியேசாதமுண்ணும்போகமநீக்கு. ௨௭

நீக்கவேதீருகிறவியாதிகேளு நிலையானகபாலவலிமண்டைக்குத்து, போகுமேபீநிசங்கள்மண்டைசூலை பொல்லாதநேத்திரத்தின்மாசிதீரும், வாங்குமேநீர்சுடுப்புமேகச்சூலை வாங்குமடாதைலமதுவாரந்தோறுங், தாக்குமேதவறுமலமூழ்கிவாநீ தணியாதநோய்களெல்லாந்தவரிப்போமே. ௨௮

அமுக்கிறுவேர் சூரணம்.

கண்டிடாஅமுக்கராசூரணத்தை கருதவேபலம்பத்துநிறுத்துக்கொண்டு, வண்மையாய்வஸ்தரகாயம்செய்துக்கொண்டு வால்மிளகுகோரோசனையும்பறங்கிப்பட்டை, கண்டிடாகருஞ்சீரகம்கடுக்காய்சுக்கு கடுகுரோகிணிதிப்பிலிமுடக்கத்தானும், விண்டிடாய்

வகைவகைக்குபலமேதூக்கு இடித்ததனைமுன்மருந்தில்சமனாய்ச்சேரே. ௨௭

சமனைசீனிசக்கரைபலந்தானைந்து சாதித்துவொருகடிகான் அங்கிசந்தி, அமனைக ஆவின்னெய்சேர்த்துக்கொள்ளு அரையாப்பு மேகவெடிகிரந்திகுஷ்டம், பெமனைகவாய்வோடுகடி விஷங்கள் பெ விகடியும்சிலவிஷங்கள்பூரான்செய்யான், சமனைமேகமொடுவாத பித்தம்கழன்றுப்போம்பத்தியந்தான்கண்டுகொள்ளே. ௩0

கொள்ளுவதுகசப்போடு புளிப்புந்தள்ளி கொள்ளவேமற்றதெல்லாம்பிச்சாபத்தியம்,தள்ளாமேத அ பாகேள்வின்னமொன்று சாற்றுவேன்லேகியந்தான்சகலநோய்க்கும்,கொள்ளவே ஆடாதோடைசமூலந்தன்னை குணமாகநிழலுலர்த்திசூரணமேசெய்து, விள்ளாதேபலம்பத்துநிறுத்துக்கொண்டு மிளகோடுகொத்தமல்லிதிப்பிலியுஞ்சுக்கே. ௩௧

ஆடாதோடை லேகியம்.

சுக்கான அதிமதுரம்தாளிசப்பத்திரி சுகமானயிந்துப்புதும்பருஷ்டங்கோஷ்டம், ணைக்கவே * இருசிரசமுங்கடுநாசப்பு அதிவிடையம்கிரும்புதேக்கு, எய்க்கவேவகைக்குஒரு பலமாய்தூக்கிபிடித்துசொன்னசரக்கெல்லாம்ஒன்றாய்ச்சேர்த்து, ஐக்கதேசினிசக்கரைநாலாம்பங்கு ஆவினெய்யும்தேனதிலேயருந்தக்கேளே.

* இருசிரகம் - சீரகம் - கருஞ்சீரகம்.

இருந்தவேலேகியம்போல்பண்ணிக்கொண்டு அந்திசந்திகொட்டைப்பாக்களவுகொள்ளு, அருந்தவேசயமீளமந்தகாசம்அஸ்திசுரம்பித்தமொடுவாய்வுகாந்தி, அருந்தகுத்திருமல்சிணுக்கிருமல் புகைச்சல் ஆகாதபலபிணிகள்அணுகாதப்பா, கருதவேபத்தியந்தானிச்சாபத்தியம் கைப்போடுபுளிப்புகொண்டுந்தவிர்த்திடாயே.

கடுக்காய்லேகியம்.

வாகானகடுக்காயின்லேகியத்தை வளமாகச்சொல்லுறேன்மக்காள்கேளும், பாரானகடுக்காய்தான்கொட்டைபோக்கிபலம்பத்துசிவனைதவேர்பலந்தான்ரெண்டு, வாறுனகரிசாலைபலந்தானரெண்டு வல்லாரைபுளிப்பாகவகைக்குரெண்டு, காரானநிலையாவாரைபலந்தான்ரெண்டுகருதியேபிடித்தொன்றாய்ச்சூரணமேசெய்து,சீரானகடுகுரோகணிகிரும்பு திப்பிலிசிறுநாகப்பூவோடுவாலுவைசிங்கி.

சிங்கியொடுகஞ்ருசிரக மிளகுதாணி சிறப்பானகொத்தமல்லிதாளிசப்பத்திரியும், இஞ்சியேவகைவகைக்குகால்பலமேதூக்கி பிடித்துமேவடிகொண்டுமுன்மருந்திற்சேரு,தாங்கியேயாவின்னெய்தேனும்விட்டு சக்கரையும்போட்டுநீலேகியமாய்ப்பண்ணே. ௩௫

பண்ணியேநாளொன்றுக்கந்திசந்தி பருங்கொட்டைப்பாக்க ளவுகொள்ளுகொள்ளு, திண்ணியேதீரும்நோய் சொல்லக்கேளு செலக்கட்டுமலக்கட்டுகோழைக்கட்டு, உண்ணவேஉஷ்ணவாய்வு மேககாந்தி உள்ளங்கால்கையெரிவுகுலேயெரிவுபிரட்டல், எண்ண வேமூலத்தில்சூடுகாந்தி யிளைப்பிருமல்புகைச்சலொடுவரட்சிசோ கைதீரும், எண்ணியேபத்தியமாய்உண்டுதேறு இதைவிட்டால் கற்பம்வேறுண்டோசொல்லே. ௩௭

இஞ்சிலேசியம்.

சொல்லவேஇஞ்சிலேகியத்தைக்கேளு தோல்போக்கிபலம்ப த்துநிறுத்துக்கொண்டு,மல்லவேபழச்சாற்றுலாட்டிமைபோல்மை ந்தனேசட்டிலேயிட்டுக்கேளு, அல்லவேசீரகமுமிளகோடேலம் அ திமதுரந்திப்பிலியுங்கோஷ்டமூலம், கல்லவேவாலுழுவைதாளிசப த்திரியும் கடுகோடுகொத்தமல்லிசித்திரமூலம், அல்லவேசிங்கியொ டுகுருசானியோமம் அப்பனேவகைக்குஅரைப்பலமேதூக்கே.()

தூக்கியேகரிசாலேபூலாவும்பழச்சாற்றுல் துவளரைத்துமுன் மருந்தோடொக்கச்சேரு,ஊக்கமாம்பிரண்டையதுமோரிலுப்பிட் டு உலர்த்திடித்துஒருபலம்போடுபோடு, ஆக்கவேவங்காளச்சீனி யப்பா அதில்பாதிபோட்டாவினெய்யைவாரே. ௩௮

நெய்வார்த்துலேகியம்போல்பண்ணிக்கொண்டு நேரமொரு பாக்களவுஅந்திசந்திகொள்ளு, பொய்யல்லபித்தவாய்வுஊஷ்ணகா ந்தி பிரட்டல்தாதுவலிகுன்மம்பித்தகுன்மம், மெய்யானஅத்திசு ரம்சன்னிதோஷம் வீரானஎரிகுன்மம்அஜீர்ணவாய்வு, செய்யவே வுப்புஷமும்அரோசிகமுந்தீரும் தீபமாம்பதியரிந்துசிராய்க்கொ ள்ளே. ௩௯

உ

சிவமயம்.

சகலரோகத்திற்கும்

மேகராஜாங்கத்துயெண்ணெய்.

நொண்டிச்சிந்து

சித்தாமணக்கெண்ணை மூன்று படியொருபாண்டத்தில் அ
ளந்துவிட்டு செப்பிடும் சார்வகைகேள்- சூரிய-காந்தியின் சார்
பொடுதலைச்சாறும்மாதளம் யிலைச்சாறும்-தேள்-கொடுக்கிலைசாற்
றுடன் தும்பைச்சாறுஈரவெங்காயசாறும்தூது-வேளையின்சார்ப
ழம்பாசிச்சாறு பீச்சங்கன்சாறுடனேகீழ்-நெல்லியின்சார்கோவ
யிலைச்சாறும் மலைவேம்பிடச்சாறுகுப்பை-மேனியின்சார் முருங்
கிலைச்சாறுமுடக்கத்தானிலைச்சாறும் நீர் முள்ளிசாருடன் காட்
டாமணக்குச்சாறும் கரிச்சாலைச்சாறுடனேபேய் தும்மட்டிக்கா
ய்ச்சார் கத்தாழைச்சார்வில்வயிலைச்சாறு கமுதை லத்தியின்
சார் முதல்சொன்னதெல்லாம் வகைக்கரைப்படியெடுத்து ஒன்
றாய் வாருசித்தாமணக்கெண்ணையிலே வார்த்தபின் அதையெடு
த்து வெய்யலில் வைத்துவிட்டு கேளினிவெட்டுமருந்து தந்தின
த்தனதனனம் தனம் தந்தினதந்தினதனதனனம். க

வெட்டுமருந்துவகை அதில் கலந்திடவேணுமிதை விளம்
பிடக்கேள் முருங்கையின்மரத்துப்பட்டை பூவரசம்பட்டை வி
ல்வப்பட்டை நொச்சிபட்டையுடனே ஆலன்மரத்துப்பட்டை
காட்டு அத்திப்பட்டைகருவேலம்பட்டையுடனே புங்கம்மரத்
துப்பட்டை எட்டி பட்டையுடன் சித்தாமுட்டிபேராமுட்டிகத்
தாழைசேர்த்துடனே கருமுள்ளி செங்கத்தாழை சிவன்வேம்பு
செம்முள்ளி நிலக்கம்பு முக்காவேளையுடன்துத்தியிலை நிலாவரை
யும் அமுக்குறுவேருடனே சித்திரைமூலம்முசுமுசுக்கைகுப்பை
மேனியும் பூமிசக்கரைக்கிழங்கு பட்டையுடன் நாயுருவிமுளகர
ணை ஆகாசத்தாமரையும் வேப்பம்பட்டையொடுசெம்பரித்திநில
ப்பனைவேர் ஆலம்விழுதுமுனை வெள்ளையெருக்கம்வேர் துளசி
வேர் வேப்பின்வேர் இவையொருவகைவகைக்கும் அஞ்சிபலம்
விழுக்காடு நிறுத்துநீ உரலிலிட்டுயிடிரெண்டுநாள்முழுதும்உன்
னால் ஆனமட்டும்பெருந்தூளாயிடித்தெடுத்து எட்டுபடி ஜலத்
துக்குள்ளே இந்த தூள் முழுதுங்கொட்டி ஒருஅடுப்பேற்றி
புளியம்விரகுதள்ளி மற்ற யெந்த விறகானாலும் பூயரிந்திநீ ஆவி
யை போக்காதே அதை அடிக்கடிதிறக்காதே யெறக்காதேஆறு
படி தண்ணியும்வற்றி அதில்ரெண்டுபடி யிருக்கையில் யெறக்கி

கொள்ளு தெளிவாயிறுத்துக்கொள்ளு முன்னே ராறுவகைவைத்திருக்கும் பாண்டத்திலேபசுவின் கோமியமும் ஒருபடி-வார்த்துநீ கிண்ணியொருபுறமாகவைத்துவிட்டு கேளினிநீ கடைசரக்குகளுரைக்கிறேனதற்கேதான் தந்தினத் தனதனனம்தனம். ௨

கடைசரக்குகள்வாங்கு யேலம் கிரும்பதிமதுரம் திப்பிலியும் வோமம்பெருங்காயம் ஜாதிக் காயுடன்கடுக்காய் சீரகமும் கருஞ்சீரகமுடனே கஸ்தூரி மஞ்சளதி விடயம்லவங்கமுடன் தாளிசப்பத்திரியும் வெத்திலைக்காய்சிறுதேக்குசுக்கு வசம்புடனே கடுகுரோகணிகொம்பு ஆனைத்திப்பிலிக்கல்லுரையுடன்கொத்தமிலியும் சூரத்துக்கடுக்காயும் அக்ரா காரமொடு சடாமாஞ்சி வலம்புரிக்காய் தண்ணிவிட்டான் கிழங்குவெள்ளெருக்கஞ்செடியின்வேர் அடிக்கிழங்கு காட்டுக்கருணைக்கிழங்கு நல்ல கெருடனிடக்கிழங்கு தேவிக்கிழங்கு தேற்றாங்கொட்டையுடனே கோஷ்டம் செம்முருங்கைப்பூ வெருக்கம்பூவுடனே முருங்கையின் மரத்துப்பூவும் புங்கம்பூவரசம்பூவும் மாதளம்பூவும் செகப்புசப்பாத்திப்பூவும் நல்ல செண்பகப்பூவுடன் தும்பைப்பூவும் ஆவாரம்பூவுடனே நல்ல அகிற்கட்டை சந்தனமும் கசகசாவும் சுத்திசெய்தநேர்வாளம் கால்பலம் ஷ சொல்லிவந்ததினுசுகள் வகைவகைக்கும் ஒவ்வொருபலம்வாங்கி அதை ஒன்றாகப்போட்டிடித்து மையதுபோலவஸ்திரகாயப்செய்து புங்கம்பாலைவிட்டு சாந்துபோலரைத்துக்கொள்ளு அரைத்தபின்னிதையெடுத்துமுன்னே யெண்ணைமுதல்சாறுவகை கியாழமெல்லாம் ஒன்றாகவார்த்திருக்கும் பாண்டத்தில் அரைத்திட்டமருந்தையுமதில்போட்டுயெடுத்துவை யடுப்புமீதில் கொஞ்சம் சிறுதணலாகவே எரித்திடுநீ யிரண்டரைநாழிவரைக்கும் அதைகிளரிக்கொண்டேயிரு அடிக்கடிநீ யேமாந்திருக்காதே மருந்துகள்யெல்லாம் ஒன்றாய் கலந்து மெழுகதுபோல் இருக்கிறபதம்பார்த்து அப்போயிரண்டுவராகனிடைகஸ்தூரியும் பச்சைகற்பூரமப்பா இதுவும்யெடுத்துக்கொள்ளிரண்டுவராகனிடையே இரண்டையும் பொடித்துக்கொண்டுகாய்கிற யெண்ணையிலேபோட்டுகலந்திரக்கிடுநீ தந்தின தனதனனம்.
௩

உள்ளுக்குயெண்ணைகுடிக்க முறைகளை உறைக்கிறேன்சாஸ்திரவிதிப்படியே முதல்நாள்தலைமுழுகு அன்று மிளகுநீர் கூட்டிக்கொண்டுபொசிப்பெடுநீ இரண்டாநாளொருபேதி நாலு ஐந்து விசையாகும்படி வாங்கிக்கொண்டுமூன்றுநாள்காலையிலும் முருங்கை அவரைபிஞ்சுபொரித்து உண்ணு நாலானால் காலையிலே மேகயெண்ணை நெய்கரண்டிரெண்டளந்து குடித்துவிடு ஆகாதுபுளிகாரம் உப்புகூடக் கூடாதுவெந்நீரும் சாதம்உண்ணு ஏழுநாள்குடிக்கவேணும் அப்பா-யெண்ணை உப்புபுளி காரமி

தெல்லாம் சேர்க்காமல் ஜாக்ரதையாய் எண்ணை தனே சிறுகக்குடித்திடுதோறுமலே எட்டுநாள்காலையிலே மருந்தெண்ணெ குடிக்காதே அன்றிரவுபகல்முழுதும் தின்னவேணும் தண்ணியுஞ்சாதம்அப்பாதெரிந்துக்கொள்ளிதுவேமுறைப்படிஒன்பதா நாட்காலைமம்அரைத்துக்கொண்டொருதலைமுழுகிவிடுஎன்மேல்பழியேது மறுமம்யெடுத்துவிட்டேன் வெளியாயுரைத்துவிட்டேன் முறைப்படி குடித்தவற்கு கெட்டமுகஜன்னிசுகஜன்னிஜுரமேது அஸ்திசுரங்களேது அந்த ஆகாதகுலைநோய்தலைநோயும்பித்தயெரிச்சலேது அந்தபோகாத வெள்ளைகொறுக்கதுவேது மேகரணங்களேது உடல்மேல்வரும் படைசொறிசிறங்கேது ஒருதலைநோயேது புறங்கழுத்துடன் கைகால் ஒய்வேது சோம்பல் திமிரேது வாய்வொடுகோமாலை சோகைவிஷங்கடியேதுவயற்றில்கிறிமியேது அபானவாய்கடுப்பேது மூலைச்சூடேது பரந்திடும்நோய்களெல்லாமிந்தப்பாருக்கென்றேயோகமுனியுரைத்தேன் பொய்யருக்குரைக்காதே சுத்த புத்தியில்லாமக்களுக்குகொடுக்காதேபாவிகட்குக்காட்டாதே தன்னுயிர்போலே பாராதகசடற்கு நீட்டாதே நம்பினல்தடுக்காதேநல்லஞானிகட்கும்யோகிகட்கும் மறைக்காதே தந்தினதனதனம்.

வசனம்.

இந்த யெண்ணை சொல்லிவந்த முறைப்பிரகாரம் காச்சி மூறுநாள் திறக்காமலே வைத்திருந்து அதன்பிறகு யெடுத்து மேலோடயிருத்துவேரே வைத்துக்கொண்டு அடியில் நின்றிருக்கும் பந்தனையை வேறேயெடுத்து யெள்ளெண்ணையைவிட்டு குழம்பாகக்கலந்துக்கொண்டு சொரிசிரங்கு படை மேகச்சூடு உள்ளவர்களுக்கும் இன்னம் குழந்தைகளுக்கும் கண்ணுக்கு காட்டாமல் சிரசுமுதல் கால்வரையில் திரேகமெல்லாம்பூசி நாலுஜாமம் ஊறவைத்து வாரத்துக்கிரண்டுவிசை ஸ்தானம்செய்வித்தால்மேக்சூடு காந்தி கண்ணெரிச்சலெல்லாந்தீரும்.

கொருக்குக்குமேல்பூசுமருந்து.

லிங்கம் பூரம் முதார்சிங்கு இந்தமூன்றும் தினுசுக்குக்கால்பலம் விதமாய்கொண்டுவந்து ஒன்ருய்மைபோல் பொடிசெய்துகொண்டு படிகாரத்தை நெருப்பில்வைத்து பொங்கிதானப்பூர்த்தபின் எடுத்துபொடியாய் நசிக்கிக்கொண்டு முன்செய்த பொடி எவ்வளவிருக்குதோ அதில் அரைப்பங்கு படிகாரத்தூளைப்போட்டுக்கலந்து பசுவெண்ணெயில்கலந்து மெழுகுபோல்குழைத்து டப்பியிலாவது கரண்டியிலாவது வழித்துவைத்துக்கொண்டு கடுக்காய் காசிக்கட்டியும் யிடித்துத் தண்ணீர்காச்சிரெணத்தைக்கழுவி துணியால் துடைத்துப்போட்டு யிந்த மலாமைத்தடவினல் மூன்றுநாளையில் ஆரி உலர்ந்துபோகும் யிந்த மலாமையே ஆணைச்சிரங்குக்குந் தடவலாம்.

மூலத்துக்கு.

காருக்கறணை கொண்டுவந்து பில்லையாக அறுத்து வெய்ய லில் உலர்த்தி பாலில் கொதிக்கவைத்து வ-படிபாலுக்கு கால்ப லம் மொளகுத்தூள் தூவி பிரதி தினமும் காலையில் சாப்பிட்டு வர நவமூலமும்போகும். எ

தூதுவேளைகிருதம்.

தூதுவேளைசமூலங் கொண்டுவந்துயிடித்து வஸ்திரகாயம் செய்து அதற்குமூன்றில் ஒருபங்கு சீனிச்சர்க்கரைசேர்த்து அ ந்திசந்தி ஒருகடி சாப்பிட்டுவர மேகம் உக-ம் தீரும் வாய்வுந் தீரும்.

பித்தத்திற்கு கியாழம்.

மிளகு திப்பிலி சுக்கு நாயுருவி மயிலிரகு பட்டுக்கந்தை இ துகளை ஒன்று இடித்துப்போட்டு அறைபடி ஜெலம்வைத்துகா ல்படியாகயிரக்கி காலை மாலை குடித்தால் நாக்கில்தண்ணீர்சுரப்பு பித்தவரட்சி நாக்குதுவளல் தண்ணிதாகம் இதுகள்தீரும். ௯

தேங்காய் அறப்பு.

நோயேதுசிரங்கு சொரிகரப்பானேது
நலமெண்ணுவரையாப்பு புண்புகைகளேது
நோயேது இன்னமொரு செய்திகேளு
நுணுக்கமாய்தேங்காயைக் கருகச்சுட்டு.
நோயேது அதிற்பாதி மிளகுஞ்சேர்த்து
நோக்கமாயரைத்ததனை வழித்துக்கொண்டு
நோயேது மேலெங்கும் பூசுபூசு
நேர்மையுடன் சாயரட்சை வெந்நீர்வாறே. ௧0

தேங்காய்ப்பால்.

வார்த்துமே மூன்றுநாள் குளித்துப்பாரு
வாராது சிறங்குசொறி கரப்பான்போகும்
வார்த்துமே யின்னமொரு சூக்ஷ்ங்கேளு
வளமான தேங்காய்ப்பால் படிதான்ரண்டு
வார்த்துமே சட்டியிலிட் டடுப்பிலேற்றி
வகையான கல்லுப்பு மஞ்சள்ரண்டு
சேர்த்துமே கரிஞ்சீர கத்திேனாடு
திரமாக வகைக்குக்கால் பலந்தான்சேரே. ௧௧

சேரப்பா சமனுகமும் மருந்துந்
திறமாகப் பொடித்தந்த பாலிற்றாவி
சேரப்பா வடுப்பேற்றிக் காய்ச்சுகாய்ச்சு
நிகரான பதமாக எண்ணைவாங்கு
ஆரப்பா யிவ்விதமாய் மருந்துசொல்வார்
அவனியிலே யுண்டோதான் கண்டாற்சொல்லு
தேரப்பா என்மருந்தே நன்மருந்து
தெளிவாகச் சொன்னேன்காண் சிறப்பாய்த்தானே. ௧௨

மாம்பட்டை.

தானேதான் வாங்கியதை யுடம்பிற்றேய்த்துத்
தனியான மாம்பட்டை தனையிடித்துக்
கோனேநீ குறிணிநீர் தனிற்குழைத்துக்
குணமாக மேற்பூசிச் சாயரட்சை
வானேநீ யிப்படியே மூன்றுநாள்தான்
வளமாகக்குளித்து வரச்சொறி சிரங்கு
தேனேதான் கரப்பானுந் தீருங்கேளு
செயலான புளியிலையாவாரை வேரே. ௧௩

வேரானதிரண்டுபங்கு மிளகு வொன்று
விருதானகரிய சீரமுங் கூட
ஆரான வசம்புசுட்டுக் கூட்டுகூட்டு
ஆடுதொடா மூலிச்சார் விட்டேயாட்டு
பேரான கராபோகி வித்துங்கூட்டு
பெரியாறைச் சாற்றிலே கொஞ்சம்வாரு
ஏரான திவையெல்லா மறைத்தொன்றாக
எள்ளென்ற நல்லெண்ணெய் தன்னிற்போடே. ௧௪

போட்டுமே ரவிபுடமாய் வைத்துக்கொண்டு
பூசியே மேலெங்குந் திவலையாக
ஆட்டுமே சாயரட்சை யரைப்புப்போட்டு
அப்பனே மூன்றுநாள் குளிக்கக்கேளு
வாட்டுமே சிரங்குசொறி கரப்பான்புண்கள்
மாறு அரிகரப்பான் சொரிகரப்பான்
மீட்டுமே வெடிசூலை யறையாப்புப்புண்
விஷக்கடிநோய் நாடாம லோடுந்தானே. ௧௫

சுரங்களுக்கு ஜன்னிக்கு மாத்திரை.

போமென்றே சருவனோ யெல்லாந்தீரப்
புகலுகிறே னானந்த மாத்திரைதான்
தாமென்ற திரிகடுகு தாரம்இந்து
தனியான வாளமொடு நாவிலிங்கம்
வேமென்ற சமனெடைதான் கல்வத்திட்டு
வெள்ளுள்ளித் தயில முடனிஞ்சிச்சாறும்
ஆமென்ற எழுநாள் மயனம்போலே
ஆட்டியே குன்றியள வுண்டைசெய்யே. ௧௬

*இந்து-இந்துப்பு * தாரம்-அரிதாரம்.

* வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு.

செய்தவுண்டை நிழலுலர்த்திச் செப்பிலிட்டுச்
சிறப்பான நெற்புடத்திலிட்டு வாங்கு
தொய்தமுள்ள விஞ்சிச்சார் தேனிலூட்டு
தொலையாத ஜன்னிபதின் மூன்றுமோடும்
மெய்தலுறு மூவேழு தோஷமெங்கே
முனையான பதினெட்டுச் சுரமுமெங்கே
ஐதவண்ட வாதமெண் பதுவுமெங்கே
அதில்பிறந்த நோயெல்லா மெங்கேபோச்சே. ௧௭

பெரும்பாண்டுக்கு

போமென்ற பெரும்பாண்டுக் கின்னங்கேளு
புகலுகிறேன் வெகுசுருக்குச் சூட்சமாகத்
தேமென்ற சுட்டசெங்கல் சிவந்ததாக
சிறப்பாக எடுத்துவந் திடித்துநன்றாய்
ஆமென்ற வேழுதரம் வடித்துக்கட்டி
யதிற்பாதி வங்காளச் சீனிசேர்த்து
வீமென்ற நாளொன்றுக் கந்திசந்தி
வெருகடித்து வேழுநாள் கொள்ளுகொள்ளே. ௧௮

சுட்டசெங்கல்லென்றால் சிட்டங்கட்டிய கல்லையெடுத்து குளத்தில்போட்டு மிதக்கினால்அந்தகல்லை வஸ்திரகாயஞ்செய்து சீனிசேர்த்துக்கொடுத்தால் சகலநோயும்கேழ்க்கும் நூறுவருஷத்தியசிட்டக்கல்லும் உதவும் அல்லது மலைகளிலும் அகப்படும்.

கலிக்கம்

கொள்ளவே பெரும்பாண்டோடெல்லாம்தீரும்
குடிகெடுத்தபுளிபுரையும் பெண்ணுந்தள்ளு

மெள்ள வகைகண்டவித்தைசொன்னேன்
வீறுகவின்னமொரு கலிக்கங்கேளு
விள்ளவேபெருங்காயந்திப்பிலி மிளகு
வெள்ளுள்ளி கிரும்புமுதலைந்துநோய்
அள்ளவே வெற்றிலைச்சார்மேனிச்சாறு
அடல்வெள்ளைச்சாரணைச்சாறதுவூட்டே. ௨௦

ஊட்டியே சாறென்றிற் சாமமொன்று
உற்பனமாயரைத்துநன்றாயுண்டை கட்டி
மாட்டியே நிழலுலர்த்திச் சந்நிதோஷம்
மாறவே தும்பைச்சார் வெற்றிலைச்சார்
வாட்டியே யிஞ்சிச்சார் மேனிச்சாறு
வாகான பழச்சாறு முலைப்பாலோடு
கூட்டியேயஞ்சனத்தைத் தீட்டிப்பாரு
குடிகெடுத்தஜன்னியது குடியேபோச்சு.

பித்தவாயுக்குபழம்.

காணாத பித்தவகை வாயுக் கெல்லாம்
காட்டுகிறேன் சூக்ஷாதிசூக்ஷமாகப்
பூணாத திரிகடுகு ஓமங் காயம்
பொடி செய்து நிம்பழந்தா னுகீற்றாய்
பாணாது பொடியைந்தி னுள்ளேவிட்டு
பனியில்வைத்து காலையிலே சப்பியுண்ணு
கோணாமல் நாள்மூன்று கொண்டுதேறு
குலைத்தோடும் பித்தவாயு உஷ்ணவாய்வே. ௨௨

நிம்பழம் எலுமிச்சம்பழம்.

வாய்வோடுகிறுகிறுப்பு மயக்கந்தூக்கம்
மந்தமாஞ்செரியாமை நெஞ்செரிப்பு
வாய்வோடு அக்னிமந்தம் அன்னத்தோஷம்
வாய்க்கசப்பு நீரூறல் வெள்ளோக்காளம்
வாய்வோடு விவையெல்லாம் காணாதோடும்
மைந்தனே கொண்டதின் மேலொருதேசி
வாய்வென்று நாள்மூன்று மறவாதுண்ணு
வாகான பித்தமெல்லா மாண்டுபோமே. ௨௩

இதுவும் எலுமிச்சம்பழம்.

மாண்டுபோ மின்னமிதிற் சூக்ஷமொன்று
 மைந்தனே நிம்பழந்தா னுலுகிற்ருய்
ஊன்றியே கீறியதி லெருக்கம்பாலே
 யூட்டியே தலைமாட்டில் வைத்துத்தூங்கு
வேண்டியே யுதையாதி யெழுந்திருந்து
 விரும்பியே நிம்பழத்தையுண்ணவ்வண்ணம்
வேண்டியே மூன்றுநா ளருந்தவாயு
 வீறிட்டு வோடிவிடு மெய்சொன்னேமே.

முதற்பாகம் முற்றிற்று.

இதில் அடங்கியிருக்கும் மருந்துகளின் அட்டவணை.

சுக்குசூரணம்
திப்பிலிசூரணம்
வெள்ளைக்குசூரணம்
வாய்ரெணத்துக்குக்கியாழம்
பல்நோய்க்குபொடி
ஜன்னிக்குதலைமுழுகதைலம்
ஷை தயிலம்
இருமலுக்குசூரணம்
சஞ்சீவியெண்ணை
கருஞ்செம்பைதயிலம்
பூவரசன்பேதி
துவரைபேதி
தூதுவேளை லேகியம்
பீநிசத்துக்குபுகை
கபாலசூலைக்கிசவுரித்தயிலம்
அமுக்கருவேர்சூரணம்
ஆடாதோடைலேகியம்
கடுக்காய்லேக்கியம்
இஞ்சிலேக்கியம்
மேகராஜாங்கபெண்ணை
கொருக்குமேல்பூசுமருந்து
மூலத்துக்கு
தூதுவேளைகிறுதம்
பித்தத்துக்குக்கிஷாயம்
தேங்காய்அரப்பு
தேங்காய்ப்பால்
மாம்பட்டை
சுரங்களுக்குஞ்சன்னிக்குமாத்தி[ரை
பெரும்பாண்டுக்கு
கலிக்கம்